(தற்காலிகப் பேரவைத்தலைவர்] [1989 பிப்ரவரி 8

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால், டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இத்துடன் என்னுடைய அலுவல் முடிகிறது. இப்போது இப்பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களும் அழைத்து வந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எழுந்து நிற்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்ந்த பின், எல்லோரும் அமர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்—(மேசையைத் தட்டும் ஒலி)

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தலாகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்காக வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவையின் விதி 8, உள் விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். அதன் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப்பெற்றவர்	..	திரு. பி. துரைசாமி
முன்மொழிந்தவர்	.. ..	மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி
வழிமொழிந்தவர்	.. ..	மாண்புமிகு திரு. துரைமுருகன்

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப் பெற்றிருப்பதால் திரு. பி. துரைசாமி அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்

1989 பிப்ரவரி 8]   [பேரவைத் தலைவர்]

என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

4. பேரவைத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தது, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்குப் பாராட்டுதல்கள். முதலில் பாராட்டுரையைத் தொடங்கி வைக்கின்றவர் மாண்புமிகு பேரவை முன்னவர் கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. அன்பழகனார் அவர்கள்.

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவையின் தலைவர் அவர்களே, தங்களை ஒருமனதாக இந்த அவை தேர்ந்தெடுத்து, தங்களைப் பாராட்டுகிற ஒரு நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பதற்காக முன்னவர் என்ற முறையில் எனது மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்க்குடிமகன் என்ற பெயரோடு புகழ்பெற்று, கல்லூரியினுடைய முதல்வராகப் பல ஆண்டு காலம் சிறப்பாகப் பணிபுரிந்த தாங்கள் பேரவையினுடைய தலைவர் என்ற அந்தத் தகுதியை இன்றையதினம் பெற்றிருக்கின்ற நிலையில் தங்களுடைய கடமையை மிகச் சிறப்பாக ஆற்றுவதற்கான எல்லாத் தகுதிகளையும் பெற்றிருக்கிறீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்த அவை தங்களை ஒருமனதாக தேர்ந்தெடுக்கக்கூடிய அந்த நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துகிற அளவிற்கு, ஆளும் கட்சி மட்டுமல்லாமல் எதிர்க் கட்சியிலே உள்ளவர்களும் உளப்பூர்வமாக வரவேற்கிற அளவிற்கு ஒரு நல்ல சூழ்நிலையில் தாங்கள் இந்தப் பதவியை ஏற்றிருக்கிறீர்கள் என்பதைக் குறிப்பிட்டுத் தங்களைப் பாராட்ட விரும்புகிறேன்.

சட்டப் பேரவை ஒரு வரலாறு படைத்தப் பேரவை என்பது நாடறிந்த ஒன்றாகும். தமிழ்நாட்டிலே வாழ்கிற ஏறத்தாழ 5 கோடி மக்களுடைய உள்ளத்தினுடைய பிரதிபலிப்பாக, எண்ணங்களின் வெளிப்பாட்டுக்கான வாயிலாக, அவர்களுடைய எதிர்கால நல்வாழ்விற்கு வழி தேடவேண்டிய ஒரு அமைப்பாக, ஜனநாயகத்தினுடைய கட்டுக் கோப்பாக, ஒருவகையில் அதனுடைய கோபுரமாக விளங்குகிற இந்தச் சட்டப்பேரவை மிகப் பெரிய உயர்ந்த குறிக்கோள்கள் கொண்டதாகச் செயல்படுவதற்கு, தங்களுடைய தலைமை உறுதுணையாக விளங்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.